## 155. உம் பாதம் என் தஞ்சம்

### பல்லவி

உம் பாதம் என் தஞ்சம் - ஏ
கண்ணிரெல்லாம் அங்கே நான் ஊற்றிவிடுவேன்
உம் பாதம் என் தஞ்சம் - ஏ
பாரத்தையெல்லாம் அங்கே நான் இறக்கிவிடுவேன்

### சரணங்கள்

1. மார்த்தாளே மார்த்தாளே
வீட்டில இயேசுவ சேர்த்தாளே
மரியாளே மரியாளே
அவர் பாதத்தில கிடந்தாளே
- உம் பாதம்

2. மார்த்தாளே மார்த்தாளே
அநேக வேலை செஞ்சதாலே
மனதுக்குள் சோர்வடைந்து
கவலை வாழ்வில் பட்டாளே
- உம் பாதம்

3. மரியாளே மரியாளே
அவர் சொல்ல கேட்டாளே
இயேசு சாமி கிட்ட
நல்ல பங்கை பெற்றாளே
- உம் பாதம்